நளினி விடுதலை கோரும் கையெழுத்து இயக்கம்

அமைப்பாளர் : கவிஞர் தாமரை

நாள் : 12-1-2007

பெறுதல்
செய்தி ஆசிரியர்

அன்புடையீர்,

வணக்கம். இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் திரு. இராசீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி கடந்த 16 ஆண்டுகளாகச் சிறையில் உள்ளார்.

நளினிக்கு உச்ச நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தபோதும் "இந்த வழக்கு தடா சட்டத்துக்குரியது அன்று" எனத் தீர்ப்பளித்தது. ஆனாலும் தடா வழக்கில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது.

நளினிக்கு விதித்த மரண தண்டனையை, தமிழக அரசு, கருணை மனுவின் பேரில் 2000ஆம் ஆண்டு ஏப்ரலில் ஆயுள் தண்டனையாகக் குறைத்தது.

நளினிக்கு சிறையில் 21-1-1992இல் பிறந்த பெண் குழந்தை இரண்டு வயது முடியும் வரை சிறையில் வளர்ந்தாள். பின்னர் நளினியின் மாமியார் குழந்தையை ஈழத்திற்கு அழைத்துப் போய் விட்டார். தற்போது அப்பெண் குழந்தைக்கு 14 வயது ஆகிறது. தன் பெற்றோரைச் சந்திக்க இந்தியா வருவதற்கான 'விசா' தொடர்ந்து அவருக்கு மறுக்கப்பட்டு வருகிறது.

சிறையில் பிறந்து தாய் தந்தையரின் அன்பும் அரவணைப்பும் அறியாமல், கடல் கடந்து வாழ்ந்து வரும் மேகரா என்கிற அரித்திரா என்ற அச்சிறுமியின் எதிர்காலத்தைக் கருதியாவது நளினியை சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

பத்து ஆண்டுகள் சிறையில் கழித்தவர்கள் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட போதும் அவர்களில் நளினி விடுவிக்கப்படவில்லை. இந்தச் சூழலில், 16 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் 41 வயதான நளினியும், தாய் தந்தையரைப் பிரிந்து வாடும் 14 வயதான மகளும் இனியேனும் ஒன்றுசேர, நளினி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, மனிதநேயத் தமிழ்ப் படைப்பாளிகளின் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்படும் கையெழுத்துக்களுடன் மாண்புமிகு முதல்வரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கையெழுத்து இயக்கத்தில் தமிழ்ப் படைப்பாளிகள் - எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள், திரைக் கலைஞர்கள், பிற கலைஞர்கள் - தங்களை இணைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :
9444233515, 9283222988, 23633433, 22231879

இதில் அமைப்பாளராக கவிஞர் தாமரை அவர்களும், அமைப்புக்குழு உறுப்பினர்களாக எழுத்தாளர்கள் பா. செயப்பிரகாசம், நெய்வேலி பாலு, கவிஞர் கிருஷாங்கினி ஆகியோரும் செயல்படுகின்றனர்.

இச்செய்தியினைத் தங்கள் மேலான இதழில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

தாமரை.

சென்னை - 24.
12-1-2007

[நளினி விடுதலை கோரும் கையெழுத்து இயக்கக் குழுவினர் சார்பாக]

தொடர்புக்கு : நெய்வேலி பாலு
பி-43, தோஷி அடுக்ககம், 321, என்.எஸ்.கே. சாலை, வடபழனி, சென்னை - 26.
தொலைபேசி : 94442 33515